மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை–காயிதே மில்லத் மாவட்டம், நாகைக்கு அருகிலே இருக்கின்ற பனங்குடியிலே ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைய இருக்கிறது. இந்த சுத்திகரிப்பு ஆலை ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னாலே அதிலேயிருந்து கிடைக்கின்ற பல்வேறு உபரி பொருள்களைக் கொண்டு அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆசைமணி அவர்களுடைய கோரிக்கை குறித்து செயற்குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் ஏற்கனவே நாகை–காயிதே மில்லத் மாவட்டத்தில் இருக்கின்ற சிட்கோ தொழில்பேட்டையில் நிலங்கள் 12.90 ஏக்கர் இடம் அபிவிருத்திச் செய்யப்பட்ட இடமாக வைக்கப்பட்டுள்ளது. இங்கே தொழில் திட்டத்தினோடு தொழில் முனைவர்கள் முன்வருவார்களேயானால் அரசு இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர் செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தொழில்பேட்டைகள் பழைய தஞ்சை மாவட்டம் என்ற ரீதியிலே கும்பகோணம் பகுதியிலே அமைக்கப்படுமா என்பதைத் தெரிவிப்பாரா அமைச்சர் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து மாற்று வினா கொடுப்பாரானால் அரசு உரிய பதிலை வழங்கும்.

487—

திருவட்டார் தொகுதி கிராமங்களில் மின் அழுத்தத்தை சீர்படுத்துதல்

*10898—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி சாத்திரவிளை, சாயப்பறம்பு, குரியோடு போன்ற கிராமங்களில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அக்கிராமங்களில் மின் அழுத்தத்தை சரி செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். மின் அழுத்தத்தைச் சீராக்க, குரியோடு பகுதியில் ஒருமுனை மின்னூட்டியை மும்முனை மின்னூட்டியாக மாற்றி அமைக்கவும் சாத்திர விளையில் ஒரு புதிய மின் பகிர்மாற்றி அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

488—

பங்குனி வாய்க்கால் தலைவாய்த்தலைப் பகுதியில் தூர் வாருதல்.

*11733—திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மேல்அணைக்கட்டு பகுதியில் காவிரியின் வடகரையில் உள்ள பங்குனி வாய்க்காலில் நீர் வரத்தின்மையால் முசிறி, லால்குடி, அரியலூர் பகுதிகளில் உள்ள 40 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி பங்குனி வாய்க்காலில் தலைவாய்த்தலை பகுதியிலிருந்து 11/2 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரி சீர் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பங்குனி வாய்க்காலில் வளர்ந்திருந்த சீமைக்காட்டாமணி செடிகள் மற்றும் தூர் முதலியன கடந்த மூன்று வருடங்களில் தேவைக்கேற்ப பராமரிப்பு நிதியிலிருந்து அகற்றப்பட்டு பாசனம் நடைபெற்று வருகிறது.

491—

திரு.வி.க. நகரில் தொழிலாளர்களுக்கான பொழுதுபோக்குமன்றம் கட்டுதல்

*16314—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகரில் தொழிலாளர்களுக்கான பொழுது போக்குமன்றம் ஒன்று கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?